ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

மார்ச் 2010 மலர் 3 இதழ் 2

India ECHOES
ONE WORLD ONE HUMANITY

For Private Circulation Only



இந்த இதழின் பொருளடக்கம்


| | |
|---|---|
| மாஸ்டரின் சுற்றுப்பயணம் | பக். 1-4 |
| அறிவிப்புகள் | பக். 5 |
| மண்டல செயல்பாடுகள் | பக். 6-9 |
| ஒளி மையம் | பக். 10 |


## மாஸ்டரின் சுற்றுப்பயணக் குறிப்புகள்

### ருத்ராபூர் மற்றும் ஹல்த்வானி

மாஸ்டர், தில்லியிலிருந்து புறப்பட்டு, மொராதாபாத் வழியாக பனிப்படலம் சூழ்ந்த சாலைகளில் பயணித்து, ஜன. 16ம் தேதி ருத்ராபூர் வந்தடைந்தார். உடனேயே சத்சங்கம் நடத்தினார்.

ஜன.17ம் தேதி காலை சத்சங்கம் நடத்திய பின்னர், காலை உணவிற்குப்பின், ஹல்த்வானிக்குப்புறப்பட்டுச்சென்றார். அங்கு ஆசிரமம் கட்டுவதற்காக, 2.25 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. இவ்விடம் நகர மையத்திலிருந்து, 5 கி.மீ தூரத்திலுள்ளது. சகஜபுரம் என்ற அப்யாசிகள் குடியிருப்பு, 6.5 ஏக்கர் நிலத்தில் உருவாக்க வகை செய்யப்பட்டுள்ளது.

மாஸ்டர் பிரசாதம் வழங்கி, பூமிபூஜை செய்து அடிக்கல்லை நாட்டினார். பின் நடந்த சத்சங்கத்தில், சுமார் 300 அப்யாசிகள் கலந்து கொண்டனர். பிறகு மாஸ்டர் நௌகுசியாதால் என்ற இடத்தில், ஏரிக்கரையில் அமைந்த குடிலுக்கு ஓய்வெடுக்கச் சென்றார். அடுத்த நாள் காலை, அவர் புத்துணர்ச்சியுடன் சத்கோலுக்குப் புறப்பட தயாரானார். அதன் முன் உள்ளூர் அப்யாசிகளுடன், சத்சங்கம் நடத்தினார். 11 மணி அளவில் அவர் சத்கோல் வந்தடைந்தார்.



### சத்கோல்

மலை சார் மையங்களிலிருந்து, அப்யாசிகள் தங்கள் அன்பு மாஸ்டரின் வருகைக்காக, மிக்க ஆவலுடனும், ஆர்வமுடனும் காத்திருந்தனர். அவர்களுடன், இமயத்தின் கம்பீரத்தோற்றமும், மாஸ்டரை வரவேற்பதைப்போன்று இருந்தது. மாஸ்டர், அந்நாளின் மீதிப்பொழுதை, குடிலில், தன் பணியிலேயே செலவழித்தார். அவர் உற்சாகத்துடன் காணப்பட்டார்.

19ம் தேதியன்று, மாஸ்டர் காலை 7 மணிக்கு சத்சங்கம் நடத்தினார். பின், நாள் முழுவதும், குடிலிலேயே தன் பணியில் ஆழ்ந்திருந்தார்.



20ம் தேதி, "வசந்த பஞ்சமி" திதியன்று மாஸ்டர் அதி காலையிலேயே தயாராகி விட்டார். முன்னிரவில் ஏற்பட்ட பல்வலியையும் பொருட்படுத்தாது, அவர் மிகுந்த உற்சாகத்துடன் அப்யாசிகளுடன் அளவளாவினார். காலை 6:45க்கு அவர் தியானக்கூடம் வந்தார். ஏற்கனவே மலையின் பல பகுதிகளிலிருந்தும் வந்தமர்ந்திருந்த அப்யாசிகளுடன், 7 மணிக்கு சத்சங்கம் நடத்தினார். மாஸ்டர் குறிப்பிட்டபடி, சத்கோலில் அப்யாசிகளின் எண்ணிக்கை 700ஐ தாண்டியது இதுவே முதல் முறையாகும். மாஸ்டர், இரு திருமணங்களை நடத்திவைத்தார். மாஸ்டரின் குடிலுக்கு முன் ஏற்பாடு செய்திருந்த மனைப்புற (PICNIC) விருந்தில், மாஸ்டர் கலந்துகொண்டு, அப்யாசிகளை களிப்புறச்செய்தார். அச்சூழலே விழாக்கோலம் பூண்டிருந்தது. ஆகாயம் தெளிவாக இருந்ததால், சூரிய ஒளி செம்மையாக விழுந்துகொண்டிருந்தது. அது அங்குள்ள குளிருக்கு மிகவும் இதமாக இருந்தது. மாலையில், மலை சார் அப்யாசிகளை மாஸ்டர் சந்தித்தார். கோபேஸ்வர் போன்ற தொலை தூரத்து மையங்களிலிருந்து வந்து, மாஸ்டரை முதல் முறையாக கண்ணுற்ற அப்யாசிகளை காண மனம் நெகிழ்ந்தது.



### மாஸ்டரின் உரையாடல்களிலிருந்து சில விவேக முத்துக்கள்


என்னைப் பொறுத்தவரை, நம்பிக்கை, தைரியம், பொறுமை எல்லாமே ஒன்றுதான். நம்பிக்கை தெய்வீகமானது. கடவுள், சீடன் முடிவில் தன்னை வந்தடைவான் என நம்பிக்கையுடன் காத்திருக்கிறார். தைரியம், தான் இருப்பதையே உணராமலுள்ளது. உடம்பு சரியில்லாத குழந்தையை, இரவு நேரத்தில் மருத்துவரிடம் கொண்டு செல்லும் அன்னைக்கு, தான் தைரியமாக இருப்பதை உணரக்கூட முடிவதில்லை. அன்பு தைரியத்தை அளிக்கிறது.


மாஸ்டரின் காட்டேஜ்


ஜெய்பூரில் ஒரு கலந்துரையாடல்


அல்வா- தியானக்கூடத்தை திறந்து வைத்தல்


அல்வா


ஜபல்பூர்

தனக்கு எது நடந்தாலும், அதை மலர்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் மனநிலை கொள்வது அவசியம்.

அவர் என்னிடம், என்னுள்ளே இருப்பதினால், எனக்கு எதுவுமே தவறாக நடக்க முடியாது. எது நடந்தாலும், நல்லதோ, கெட்டதோ, அது எனக்கு நல்லதாகவே அமையும்.

21ம் தேதி காலையில், மாஸ்டர், 7:30 மணிக்கு ருத்ராபூருக்கு புறப்பட்டுச்சென்றார். அங்கு சிறிது நேர ஓய்விற்க்குப்பின், மொராதாபாத் வந்து சேர்ந்தார். அடுத்த நாள் அவர், தில்லி, குர்கான்வில் உள்ள மண்டல ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார். நீண்ட தூரப்பயணத்திற்க்குப்பின் ஓய்வெடுத்தார். மாலையில் சகோ. அஜய் பட்டர் சத்சங்கம் நடத்தினார். அதில் சுமார் 750 அப்யாசிகள் கலந்து கொண்டனர். 24ம் தேதி காலை, மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். அதில் சுமார் 2500 அப்யாசிகள் கலந்து கொண்டனர்.

## ஜெய்பூர்

ஜன.24ம் தேதி, மாஸ்டர் ஜெய்பூர் வந்தடைந்தார். குர்கான்விலிருந்து மேற்கொண்ட, தரை வழிப்பயணத்தினால் சோர்வுற்ற போதிலும், அவர் உற்சாகத்துடனேயே காணப்பட்டார். ஆசிரமத்தில் அநேக அப்யாசிகள் அவரை வரவேற்றனர். ஆசிரம கட்டுமானபணி முடிவுறாததால், அவர் சகோ. சுதிர் வீட்டில் தங்கினார். குஜராத் மற்றும் ராஜஸ்தானிலிருந்து, சுமார் 2900 அப்யாசிகள் வந்திருந்தனர். அந்த சூழலே அன்பை பிரதிபலித்தது. 25ம் தேதி காலை, மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். பின்னர், பஜனைப்பாடல்கள் பாடப்பட்டன. மாஸ்டர் ஆசிரம கட்டுமானப்பணியை பார்வையிட்டர். அந்நாளில் பல அப்யாசிகளை சந்தித்தார். பல திட்டங்களை முடிவு செய்தார். 26ம் தேதி மாலை, மாஸ்டர் ஆசிரமத்தில் சத்சங்கம் நடத்தினார். மிகவும் சோர்வுற்றிருந்த போதிலும் அவர் அடிக்கடி வெளியே வந்து அப்யாசிகளை சந்தித்தார். 27ம் தேதி காலை சத்சங்கம் நடத்தினார். பின் சகோ. நிஹாரிகா கவிதை வாசித்தார். மாஸ்டர் அப்யாசிகளுடன் கலந்துரையாடும்பொழுது, ஒரு திட்டத்தை நிறைவேற்றுமுன்னர், கருத்துக்கோர்வை, முடிக்கும் திறன் மற்றும் எளிமையாக கையாளும் திறன் முதலியவற்றை மனதில் கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அவர் 28ம் தேதி காலை, அல்வருக்கு புறப்பட்டுச்சென்றார்.

## அல்வர்

மாஸ்டர், அல்வரில் ஆசிரமக்கட்டிடத்தை திறந்துவைப்பதற்காக அங்கு தங்கினார். சுமார் 500 அப்யாசிகள் அவரை மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும், பக்தியுடனும் வரவேற்றனர். தெற்கு வாசல் மேல் அமைக்கப்பட்டிருந்த திறப்புவிழாக்கல்லை அவர் திறந்து வைத்தார். பிறகு அவர் ரிப்பன் வெட்டி, தியானக்கூடத்தில் பிரவேசித்தார். பின், சுமார் 50 நிமிடங்களுக்கு அவர் சத்சங்கம் நடத்தினார். ஆசிரம வளாகத்தில், அவர் அரை மணி நேரம் தங்கியது, அப்யாசிகளுக்கு அவரை சந்திக்க ஒரு வாய்ப்பாக அமைந்தது. மதிய உணவிற்குப்பின், அவர் சிறிது ஓய்வெடுத்தார். பிறகு அவர், கார் மூலம் தில்லிக்கு புறப்பட்டுச் சென்றார். அல்வர் அப்யாசிகளிடம், தான் மறுபடி வருவதாக வாக்களித்தார்.

## ஜபல்பூர்

ஜன.30ம் தேதி, மாஸ்டர் விமானம் மூலம் தில்லியிலிருந்து ஜபல்பூர் வந்தடைந்தார். சுமார் 2000 அப்யாசிகள், சாலையின் இருபுறத்திலும் நின்று, அவருக்கு வரவேற்பளித்தனர்.

31ம் தேதி 3 நாள் 'வசந்த பஞ்சமி' விழா மண்டல ஆசிரமத்தின் (ம.பி) திறப்பு விழாவுடன் தொடங்கியது. தியானக்கூடம், பண்டைய ஆங்கில கட்டிடக் கலைநயத்துடன் கட்டப்பட்டிருந்தது. அது, மாஸ்டர், கிரைஸ்ட் சர்ச் பள்ளியில் படித்த நாட்களை நினைவூட்டியது.

7:30 மணி அளவில், அவர் தியானக்கூடத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். அவர் உள்ளே சென்று, இருக்கையில் அமரும் வரை அப்யாசிகள் காத்துக்கொண்டிருந்தனர். சத்சங்கத்திற்கு பின் மனம் நெகிழ்வுறும் வண்ணம் பஜனைப்பாடல்கள் பாடப்பட்டன. பிறகு அவர், ஆசிரம வளாகத்தை காரில் சுற்றிப்பார்த்தார்.கூடாரங்களில், குளிரில் வசதியற்ற நிலையில் தங்கியிருந்த போதிலும் அப்யாசிகள் மகிழ்ச்சியாக இருந்தனர். மற்றும், தாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டதாகவும் உணர்ந்தனர். அந்தச்சூழலே தெய்வீகத்தில் ஆழ்ந்திருந்தது. ஏற்பாடுகளெல்லாம் மிக நன்றாக இருந்தது. வசதிவிடுதி, புத்தக விற்பனைகூடம், குழந்தைகள் மையம் போன்றவையும் இடம் பெற்றிருந்தன.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்





ஜபல்பூர்

பிப். 2ம் தேதி, மாஸ்டர் தியானக்கூடத்திற்கு வந்தபோது, அப்யாசிகள் சரியான நேரத்தில் வந்து அமர்ந்திருப்பதை காண மிக்க மகிழ்ச்சி அடைந்தார். அவர், அப்யாசிகளை சீக்கிரம் அவரவர் இடத்தில் அமருமாறு கேட்டுக்கொண்டார். அவர் "khane ki table par aap kitni der wait kar sakte ho, areh bhai! jaldi se khana dijiye, yahan bhi aise hi hai hum, ab ruk nahi sakte, shuru karna hi hoga" (சாப்பாட்டுத்தட்டின் முன் எவ்வளவு நேரம் காத்திருப்பது? சகோதரனே! சீக்கிரம் பரிமாறு என்று கூறுவதைப்போல் இங்கும் இருக்கிறது. இனிமேலும் என்னால் காத்திருக்க முடியாது, சத்சங்கம் தொடங்கிவிட வேண்டியதுதான்) என புன்சிரிப்புடன் கூறினார்.)

சத்சங்கத்திற்குப்பின் சகோ. அஜய், முறையான சாதனாவின் முக்கியத்துவத்தைப்பற்றி வலியுறுத்தினார். மேலும் பேசுகையில் அவர், லட்சியத்தை எப்பொழுதும் கண்முன்னே நிறுத்தி, மாஸ்டர் பண்டாராக்களில் அளிக்கும் விசேஷ தன்மையை காப்பாற்றிக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டர். அவர் மேலும், மாஸ்டர் புது வருட முதல் நாளன்று நிகழ்த்திய உரையை நினைவில் நிறுத்தி, தங்கள் உள்ளங்களில் லட்சியத்தை விரைவில் அடைய உறுதி பூணுமாறு அப்யாசிகளை கேட்டுக்கொண்டார். மாஸ்டர், மாலை சத்சங்கம் நடத்திய பின் பேசுகையில், "கட்டுப்பாடு உடையவன்தான் உண்மையான சீடன்; யார் புத்தியைவிட உள்ளத்திற்கு கட்டுப்படுகிறானோ, யார் பயத்தை விட அன்புக்கு கட்டுப்படுகிறானோ, யார் கட்டுப்பாடுதான் லட்சியத்தை அடைய தன்னை கொண்டு செல்லும் என்பதை உணர்ந்திருக்கிறானோ அவனே உண்மையான சீடன் என்று அறிவுறுத்தினார். சுமார் 3800 அப்யாசிகளும் 300 குழந்தைகளும் இவ்வசந்தபஞ்சமி விழாவில் பங்கேற்றனர்.

## நாக்பூர்

மாஸ்டர், 3ம் தேதி காலை, தரை வழி பயணமாக நாக்பூருக்கு புறப்பட்டார். போகும் வழியில், சியோனி என்ற இடத்தில், அவருக்காக சுமார் 300 அப்யாசிகள் காத்திருந்தனர். அவர் வெயிலில் உட்கார்ந்து, அவர்களுடனும், குறிப்பாக குழந்தைகளுடனும் மகிழ்ச்சியோடு அளவளாவினார். மதிய உணவிற்கு பின், நாக்பூருக்கு புறப்பட்டார். நாக்பூர் நகரத்திலிருந்து,12 கி.மீ. தொலைவிலுள்ள ஆசிரமத்திற்கு நேராக வந்தடைந்தார். சுமார் 1200 அப்யாசிகள், அங்கு குழுமியிருந்தனர். அவர்கள், தங்கள் அன்பு மாஸ்டரைக்காண மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். 6.30 மணி நேர பிரயாணத்திற்குப்பின், அவர் சிறிது ஓய்வெடுத்தார். பின், தியானக்கூடத்திற்கு சென்று, சத்சங்கம் நடத்தினார். அதன் பின், ஒரு சிறு கலை நிகழ்ச்சியை கண்டு ரசித்தார். இரவு உணவிற்குப்பின், ஒரு அப்யாசி வீட்டில் தங்க புறப்பட்டு சென்றார்.

4ம் தேதி காலை, ஆசிரமத்தை ஒட்டிய குடியிருப்பு வளாக நில பத்திரங்களை விநியோகித்தார். "ஆன்மாவின் யாத்திரை" என்ற அழகான நடன நிகழ்ச்சி அளிக்கப்பட்டது. மாஸ்டர் தங்கியிருந்த வீடு, ஏறத்தாழ 100 வருட பழமையானது. மாஸ்டர், ஜபல்பூரில் வசித்த வீட்டைப்போலவே இருந்தது. அக்கால மக்கள் மனது விசாலமாக இருந்ததைப்போலவே வீடுகளும் விசாலமாக இருந்தன என்றும், இன்றைய மக்களின் குறுகிய மனங்களைப்போலவே, வீடுகளும் குறுகி விட்டன எனக் குறிப்பிட்டார். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த, மாஸ்டரின் இப்பயணம், இம்மையத்தை மென்மேலும் வளரச்செய்யும் என்பதில் ஐயமில்லை. மாஸ்டர் மாலை 5:40க்கு, விமானம் மூலம் கொல்கத்தாவிற்கு புறப்பட்டு சென்றார்.

## கொல்கத்தா

பிப். 4ம் தேதி, மாஸ்டரின் வருகைக்காக, அநேக அப்யாசிகள் கொல்கத்தா விமான நிலையத்தில் காத்திருந்தனர். மாலை 7:20க்கு அவர், 100 அப்யாசிகள் புடைசூழ, (90க்கும் அதிகமானோர் அயல்நாட்டு அப்யாசிகள்) கொல்கத்தா வந்தடைந்தார். உடனேயே அவர் ஆசிரமத்திற்கு புறப்பட்டுச்சென்றார். 5ம் தேதி காலை அவர் சத்சங்கம் நடத்தினார். அதில் 800 அப்யாசிகள் கலந்து கொண்டனர்.

பிப். 6ம் தேதி, சத்சங்கத்திற்குப்பின், சகோ.பிரகாஷும், சகோ.பாட்ரிக்கும் வினா-விடை நிகழ்ச்சி நடத்தினர். அது மிக அருமையாக அமைந்தது மட்டுமின்றி, மாஸ்டரின் பிரசன்னத்தையும் உணர வைத்தது. சமையல்கூட தன்னார்வத்தொண்டர்கள், மாஸ்டரை, இரவு உணவு உண்ண, ஆசிரம சாப்பாட்டுக்கூடத்திற்கு அன்புடன் அழைத்தனர். அவரும் அழைப்பை ஏற்று, அப்யாசிகளுடன் உணவருந்தினார்.

7ம் தேதி, சத்சங்கம் தொடங்கு முன் மாஸ்டர் பேசும் பொழுது, கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தைப்பற்றி மீண்டும்

நாக்பூர்



கொல்கத்தா




வலியுறுத்தினார். அவர், சத்சங்கம் இன்றியமையாதது ஆனால், தினசரி சாதனாவை கடைப்பிடிப்பது அதைவிட முக்கியமானதாகும், அதை, எக்காரணம் கொண்டும் விட்டுவிடக்கூடாது என்றார். பத்து நியமங்களையும், நம் தினசரி வாழ்க்கையின் ஒரு பகுதியாக அமைத்துக்கொண்டு, அவர், பொருள் சார்ந்த வாழ்க்கை, மற்றும் ஆன்மீக வாழ்க்கையின் எதிர்பார்ப்புக்களை மிக கவனமுடன் வரையறுத்துக்கொள்ள கேட்டுக்கொண்டார். பல அப்யாசிகள், விரும்பத்தகாத ஏதாவது ஒன்று நேர்ந்தால், மிஷனை விட்டு சென்றுவிடுகின்றனர். இது கூடாது. ஏனெனில், பொருள் சார்ந்த வாழ்க்கையில் ஏற்படும், சுக துக்கங்கள் யாவும், நமது முன்வினைப்பயன்களால் மட்டுமே என்பதை கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.



சத்சங்கத்திற்க்குப்பின், சகோதரி. அபர்ணா கோஷ் பஜனை பாடல்கள் பாடினார். பின், மாஸ்டர், சகோ.அஜய் பட்டர் இல்லத்திற்கு சென்று, அங்கு மூன்று நாட்கள் தங்கினார். அங்கு, அவர் பல அப்யாசிகளை சந்தித்தார். பல நிர்வாக வேலைகளில் ஈடுபட்டார். சிட்டிங்குகளும் கொடுத்தார். 10ம் தேதி காலை, மாஸ்டர் சென்னைக்கு புறப்பட்டுச்சென்றார்.

## புதிய வெளியீடுகள்


குரு மற்றும் லட்சியம் (ஆங்கிலம்)





இதய வாக்கு 2005 (கன்னடம்)




மனிதப் பரிமாண வளர்ச்சியில் மாஸ்டரின் பங்கு (தெலுங்கு)




என் மாஸ்டர் (ஹிந்தி)





சத்யோதயம் (ஆங்கிலம்)





நித்திய சத்தியம் (ஆங்கிலம்)





நித்திய சத்தியம் (தமிழ்)





அவர் ஓர் அற்புதம் - பாகம் 2 (ஹிந்தி)




என் மாஸ்டர் (மலையாளம்)



அப்யாசி டைரி




## அப்யாசி பயிற்சி நிகழ்ச்சிகள்

### பன்வேல், மும்பை

டிசம்பர் 27-29, மூன்று நாட்கள் நடைபெற்ற, அனுபவ பங்கீட்டு நிகழ்ச்சியில், 35 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். முதல் நாளன்று, புத்தகம் வாசிக்கும் பகுதியில், சத்யோதயத்தில் இடம்பெற்றுள்ள அத்யாயங்கள், ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில் வாசிக்கப்பட்டன. மேலும், "அன்புக்கடல்" என்ற மாஸ்டரின் குறும்படம் ஒலிபரப்பப்பட்டது. இரண்டாவது நாளில், சகஜ மார்க்கப் பயிற்சி மற்றும் தன்னார்வத் தொண்டு பற்றிய உரைகள் இருந்தன. கடைசி நாளானது, அப்யாசிகளின் கருத்துப் பரிமாற்றங்களுடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து, உடனடியாக முன்னறிவிப்பு இன்றி, அன்பு, சகிப்புத்தன்மை மற்றும் ஒழுக்க நெறி போன்ற தலைப்புகளில் உரை நிகழ்த்தப்பட்டது. அந்த நாளானது, அப்யாசிகள், தங்களுக்கு நமது மாஸ்டருடன் ஏற்பட்ட, முதல் சந்திப்பு பற்றிய அனுபவங்களை பகிர்ந்து கொண்டதுடன் முடிவுற்றது. இந்த நிகழ்ச்சியின் நோக்கம், "முன்னோக்கிப் பார்த்தல்" என்பதாகும். அதாவது தங்களின் நிலை பற்றி ஆய்ந்தறிந்து, பின்னர் 3M-களை நோக்கி தங்களுக்குள் மாற்றங்களைக் கொண்டு வருவதாகும். இந்த எண்ணம், மூன்று நாட்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், நன்கு பரிமளித்தது.


## பூஜ் ஆசிரமம், அடிக்கல் நாட்டு விழா

பூஜ் மையத்தைச் சேர்ந்த பிரசெப்டர், டாக்டர் N.O. சௌகான் அவர்கள், அங்கு நிறுவப்படும் ஆசிரமத்திற்கு அடிக்கல் நாட்டினார். 75க்கும் மேற்பட்ட அப்யாசிகள், அங்கு கூடியிருந்த நிலையில், அவர்களனைவரும் மாஸ்டரின் பிரசன்னத்தை அந்த சிறப்பான நாளில் உணர்ந்தனர். 9787.3 சதுர அடிகொண்ட இந்த ஆசிரம இடம், 2005ம் ஆண்டு City Square Township-ஆல் நன்கொடையாக அளிக்கப்பட்டது. இது, பூஜ் நகரத்திலிருந்து சுமார் 12கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## நமது அன்புக்குரிய மாஸ்டரின் 84வது பிறந்த நாள் விழா




தேதிகள்: ஜூலை 23-26, 2010
இடம்: பாபூஜி மெமோரியல் ஆசிரமம்
ஸ்ரீராம் சந்திர மிஷன், I I M ரோடு,
லக்னோ(உ.பி.),இந்தியா

அன்பு சகோதர மற்றும் சகோதரிகளே,

வணக்கம். மாஸ்டரின் வார்த்தைகளில் சொல்வதானால் "இதில் (பண்டாராவில்) பங்கேற்பது மணமிக்க, குளிர்ந்த சரோவர் ஏரியில் குளிப்பதைப் போன்றது. அதாவது இதில் குளிப்பது, (பங்கேற்பது) அப்யாசி தன் ஆன்மீகப் பாதையில் தன்னைப் புதுப்பித்துக்கொள்ள குளிப்பதைப் போன்றதாகும். உண்மையில் சொல்வதானால் அதில் மூழ்கிவிடுவதைப் போன்றதாகும்."

நமக்கு, நம் அன்புக்குரிய மாஸ்டரின் 84வது பிறந்த நாள் விழா கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு, அவருடைய எல்லையற்ற அருளில் மூழ்கும், இன்னொரு வாய்ப்பினை கொடுத்தமைக்காக, மாஸ்டருக்கு நாம் நன்றி செலுத்துவோம். இந்த பண்டாரா, ஜூலை 22 முதல் 26 வரை, லக்னோ மாநகரில் கொண்டாடப்படும். மேலும், ஜூலை 25 அன்று, சிறப்பு வாய்ந்த குரு பூர்ணிமா நிகழ்ச்சி, தெய்வத்தன்மை பொருந்திய நமது மாஸ்டர் முன்னிலையில் நடைபெறும்.

நாம் இருக்கும் ஒவ்வொரு விநாடியையும், நாம் சுவாசிக்கும் ஒவ்வொரு சுவாசத்தையும், நமக்கு இங்கு வாழும் வாய்ப்பினையும் அளித்த, நமது தெய்வீக மாஸ்டருக்கு, நன்றி செலுத்தும்படி அமைத்துக்கொள்வோம். நாம் அதிக அளவில், அந்த சிறப்புமிக்க நன்னாளில், அன்பு மற்றும் நன்றி மிகுந்த இதயத்துடன் ஒன்று கூடி, மிகச் சிறப்புமிக்க சரோவரில் மூழ்குவோமாக.

அன்புடன்,
அஜய் பட்டர்

அழைப்பிதழ் மற்றும் முன்பதிவு, லக்னோ பயணம் போன்றவை பற்றிய தகவல்கள், மிஷனின் கீழ்க்கண்ட இணையதளத்தில் கிடைக்கின்றன.
http://www.sahajmarg.org/24july2010/index.jsp

கொண்டாட்டங்கள் பற்றிய அவ்வப்போதைய அறிவிப்புகள் மற்றும் தகவல்களுக்கு, மேற்கண்ட இணையதளத்தை அணுகும்படி, தயவுடன் கேட்டுக்கொள்கிறோம். அப்யாசிகள், கூடியவரை மே15, 2010 முன்பாகவே, முன்பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விளக்கங்களுக்கு அணுகவும்:

24july.registration@srcm.org அல்லது 24july.helpdesk@srcm.org

## பயண வேண்டுகோள் பற்றிய செய்திகள் மற்றும் விண்ணப்பப்படிவங்கள்

இந்தியாவிலுள்ள, மணப்பாக்கம் மற்றும் இதர SRCM ஆசிரமங்களுக்கு வர விரும்பும் அப்யாசிகளுக்கான தகவல்கள், தற்போது கீழ்க்கண்ட இணையதளத்தில் கிடைக்கப்பெறுகின்றன.
http://www.sahajmarg.org/smww/bma-request-to-visit


அப்யாசிகள் மணப்பாக்கம் ஆசிரமம் வர, மாஸ்டருடன் பயணம் செய்ய, அல்லது, இந்தியாவில் பண்டாராக்களில் கலந்துகொள்ள, பயண வேண்டுகோள் விண்ணப்பங்கள் மிகவும் அவசியம்.

இந்த அனுமதி கோரும் ஒவ்வொருவரும், அவர்தம் பிரசெப்டர், மற்றும் அவர்தம் நாட்டு மிஷன் பொறுப்பாளர்/வட்டார ஒருங்கிணைப்பாளரால் பரிந்துரைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகள் மற்றும் விண்ணப்பிக்கும் முறைகளை தயவுசெய்து கவனமாக பின்பற்றவும். சத்கோல், CREST மற்றும் மிஷனின் புத்துணர்வு மையங்களுக்கான தனிப்பட்ட பயண வேண்டுகோள் விண்ணப்பங்கள், அம்மையங்களுக்கான இணையப் பக்கங்களில் உள்ளன.

## கடந்த காலம் பற்றி ஒரு பார்வை


நவம்பர் 1950: (பாபூஜியின் டைரியிலிருந்து) "மாஸ்டரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் என்பது, பூஜைகளைக் காட்டிலும் மிகவும் மேலானது. யாரொருவர் லாலாஜி மகராஜின் பொருட்டு பணி செய்கிறார்களோ, அவர்களின்பால் நான் கவர்ந்திழுக்கப்படுவதாக உணர்வேன்."

1954: சத்யோதயம் புத்தகம், 1954 ஆம் ஆண்டு, முதன்முதலில் வெளியிடப்பட்டது. இங்குள்ள படம், அப்போதைய புத்தகத்தின் அட்டைப்படத் தோற்றமாகும்.




அந்த புத்தகத்திலிருந்து சில வரிகள்: "இலட்சியத்தை குறுகிய காலத்தில் அடையவேண்டி, பொறுமையின்மை அல்லது நிலையான தவிப்பு கொண்டிருப்பது, நாம் ஆன்மீகப்பாதையில் விரைவாக முன்னேற ஒரு முக்கியமான தேவையாகும்."

"ஆன்மீகத் தேடலில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு, சமநிலையோடு இருத்தல் என்பது ஒரு முக்கியமான ஒன்றாகும். சமநிலை என்பதை, தனது அனைத்துச் செயல்பாடுகளிலும் கொண்டிருத்தல், மிகவும் அவசியம். அதாவது சிறிதளவு கூட குறைவாகவோ அல்லது நிறைவாகவோ இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அந்த நேரத்தில் அந்த இடத்தில் என்ன தேவையோ அதனை மட்டும் உபயோகித்து, மனதில் சிறிது கூட பதிவுகள் உருவாகாதவண்ணம் சமநிலையோடு இருத்தல் வேண்டும்."



டிசம்பர் 1957: கர்நாடகாவில் உள்ள குல்பர்காவில் நடைபெற்ற, ஆண்டு விழா நிகழ்ச்சியொன்றில், பெருமதிப்பிற்குரிய பாபூஜி மகராஜ் அருளிய "கடவுளை அறிவதற்கு சுலபமான வழி" என்ற சொற்பொழிவிலிருந்து:

"என்னுடைய அனுபவத்தின் மூலம், நம் எல்லோராலும் மிகச் சுலபமாக பின்பற்ற இயலும் ஒரு சாதாரண வழிமுறையை பரிந்துரைக்கிறேன். ஒருவரால் தன்னுடைய இதயத்தை விற்க முடியுமானால், அதாவது அதை ஒரு தெய்வீக மாஸ்டரிடம் பரிசாக கொடுக்கமுடியுமானால், அதைவிட வேறொன்றும் செய்யத் தேவையில்லை. இந்த செயல் அந்த நபரை இயல்பாகவே எல்லையற்ற பரம்பொருளை அடையும் நிலைக்கு அழைத்துச் செல்லும்."

"மேலும் ஒரு விஷயம்: இதயத்தை மாஸ்டரிடத்தில் சுலபமாகச் சரணடைய வைக்க, விருப்பம் ஒன்று மட்டுமே போதும். அந்த எளிய, மென்மையான திடம் செயல்புரியும்போது, மிகப்பெரிய விளைவை உண்டாக்கும்."

மூலம்: சத்யோதயம், ராம் சந்திராவின் படைப்புகள் பாகம்-3 ராம் சந்திராவின் சுயசரிதம் பாகம் -2 மற்றும் உலகளாவிய செய்திகள் என்னும் புத்தகத்தின் பக்கங்களிலிருந்து)

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# பூஜ்ய லாலாஜியின் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டங்கள்



பெரு மதிப்பிற்குரிய லாலாஜி மகராஜின் பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள், பிப்ரவரி 2ஆம் தேதி, நாடு முழுவதிலுமுள்ள அனைத்து மையங்களிலும், பசந்த் உத்சவமாகக் கொண்டாடப்பட்டது. மாநிலம் வாரியான அறிக்கைகள் பின் வருமாறு:

ஆந்திரப் பிரதேசத்தில் பிறந்த நாள் விழா, முழு நாள் நிகழ்ச்சியாக, கோலகலூரு மற்றும் கம்மம் பகுதிகளில் கொண்டாடப்பட்டது. கோலகலூரு மையத்தில், உரைகள், வினாடிவினா நிகழ்ச்சி மற்றும், எப்படி ஒருவர் கவர்ச்சிகளுக்கு இரையாகின்றார் என்றும், எப்படி அவர் மாஸ்டரின் உதவி மற்றும் நிலையான நினைவு மூலம், அத்தகைய சூழ்நிலைகளிலிருந்து வெற்றிகரமாக வெளிவருகின்றார் என்பதையும், ஒரு நாடகமாக நடத்திக் காட்டினர். கம்மம் மையத்தில், அதன் அருகினிலிருக்கும் மையங்களிலிருந்தும் அப்யாசிகள் வந்து கலந்து கொண்டனர். 164 அப்யாசிகள், கம்மம் மைய விழாவில், பங்கு கொண்டனர்.

அஸ்ஸாமில், குவஹாத்தி மையத்தில், மொத்தம் 150 அப்யாசிகள் கலந்து கொள்ள, விழா கொண்டாடப்பட்டது. குறிப்பாக, வெளியூர் அப்யாசிகளுக்கு ஒரு பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நம்பிக்கை, வாழும் குருவின் முக்கியத்துவம், சகஜ மார்க்கம் மற்றும் பகவத் கீதை ஆகியவை பற்றிய உரைகள் ஒலிபரப்பப்பட்டன. அதனைத் தொடர்ந்து லாலாஜி மகராஜ் பற்றிய ஒளி-ஒலி நிகழ்ச்சியும், நன்னெறி சார்ந்த செயல்பாடுகளும் நடைபெற்றன. இந்த உத்சவத்தின் ஏற்பாடு, உள்ளூர் அப்யாசிகளுக்கு ஒரு கற்றுக்கொள்ளும் வாய்ப்பாக அமைந்தது.

கம்மம்



குவஹாத்தி



ஜார்கண்டில், லால்பானியா மையத்தில் மிகுந்த உற்சாகம், மற்றும் பக்தியுடன் உத்சவம் கொண்டாடப்பட்டது. காலை 7:30 மணி சத்சங்கத்திற்குப் பின்னர், சகோதரர் N.K ஷா, லாலாஜி மகராஜின் போதனைகளை விவரித்தார். மாஸ்டர், மிஷன் மற்றும் பயிற்சி பற்றிய வினாடி வினா நிகழ்ச்சியை, சகோதரி ரத்னா ஷா நடத்தினார். இந்நிகழ்ச்சி, அப்யாசிகளிடத்தில் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தியதுடன், இதயப்பூர்வமாக அவர்களை பங்கேற்கவும் செய்தது. இது அப்யாசிகளிடத்தில் மிகுந்த பக்தியையும், அப்யாசிகளின் குடும்பங்களைச் சேர்ந்த அப்யாசியல்லாதவர்களிடத்தில், மிகுந்த ஆர்வத்தையும் ஏற்படுத்தியது. மாலை சத்சங்கத்திற்குப் பின்னர் கொண்டாட்டங்கள் நிறைவு பெற்றன.

கர்நாடகாவிலுள்ள குல்பர்கா, ஹுப்ளி மற்றும் பிதர் ஆகிய இடங்களில் உள்ள மையங்களில், கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இந்த நன்னாளில், குல்பர்கா மையத்தில், 14 பேர் அறிமுக சிட்டிங் எடுத்துக் கொண்டனர். ஹுப்ளி மையத்தில் நடைபெற்ற முழு நாள் விழாவில், 150க்கும் மேற்பட்ட அப்யாசிகள் பங்குபெற்றனர். பிதர் மையத்தில், அதன் அருகினிலிருக்கும் மையங்களைச் சேர்ந்த அப்யாசிகளும் கலந்து கொண்டனர்.

மங்களூரில், லாலாஜி மகராஜின் பிறந்த நாளையொட்டிய முழு நாள் நிகழ்ச்சியில், சுமார் 50 அப்யாசிகள் பங்கேற்றனர். இரண்டு சத்சங்கங்களைத்தவிர, "சேவையின் மூலம் அன்பை வளர்த்தல்" என்னும் மாஸ்டரின் உரையும் வாசிக்கப்பட்டது. பிரன்ச்க்குப் (brunch) பின்னர் நடைபெற்ற பகுதியில், அப்யாசிகளின் உரைகள், மற்றும் பாடல்கள் இருந்தன. இந்த உரைகளில், லாலாஜியின் வாழ்க்கை, மற்றும் அவரது போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மதிய வேளையில், மாஸ்டரின் சொற்பொழிவான, அன்புக் கடல் ஒலிபரப்பப்பட்டது.

நவம்பர் 2008 துவக்கப்பட்ட பரம்தாம் ஆசிரமத்தில், பெங்களூர் முழுவதிலிருந்தும் அப்யாசிகள், பூஜ்ய லாலாஜியின் பிறந்த நாள் விழாவைக் கொண்டாட முதன்முறையாகக் கூடியிருந்தனர். சுமார் 1200 அப்யாசிகள் மற்றும் 100 குழந்தைகள் பங்கு கொண்டனர். லாலாஜியின் வாழ்க்கை மற்றும் போதனைகள் பற்றிய சில உரைகள் அங்கு நிகழ்த்தப்பட்டன. லாலாஜி மகராஜின் வாழ்க்கை பற்றிய திரைப்படம், ஆசிரமத்தின் பல்வேறு இடங்களில், அதிகப்படியான அப்யாசிகள் பார்க்கும் வகையில், CCTV மூலம் ஒலிபரப்பப்பட்டது. இந்த கொண்டாட்டம், மாலை

ஹுப்ளி



மங்களூர்



பெங்களூர்




ஆலுவா


மிர்ஜாபூர்


கொல்கத்தா

சத்சங்கத்துடன் நிறைவு பெற்றது.

கேரளாவில், ஆலுவா, எர்ணாகுளம், பாலக்காடு, பட்டாம்பி ஆகிய மையங்களில், முழுநாள் நிகழ்ச்சிகளுடன் பசந்த் உற்சவம் கொண்டாடப்பட்டது. காலை 7.30 மணிக்கு சத்சங்கம் நடைபெற்றது. பின், காலை உணவைத் தொடர்ந்து, லாலாஜியின் வாழ்க்கையைப் பற்றிய வீடியோ காட்சி இருந்தது. பஜனைப்பாடல்கள், மிஷன் புத்தகங்களைப் படித்தல் ஆகியவையும் இருந்தன. பத்திரிபாலா, நெம்மாரா, கொங்காட், மற்றும் ஒத்தப்பாலம் மையங்களைச் சேர்ந்த அப்யாசிகளும், பாலக்காடு மையத்தில் கூடினர்.

அப்யாசிகள் சமுதாயத்துடன் இணைந்து செயலாற்றுதல், பணி, குடும்பம் ஆகியவற்றைப் பற்றிய அவர்களின் அணுகுமுறை, உடல்நலம், மற்றும் மனநலத்தைப் பேணுதல், மற்றும் ஆன்மீகம் ஆகிய விஷயங்களைப் பற்றிய ஒரு சுய மதிப்பீடு வினாப்பட்டியல் ஒன்றை, காசர்கோட் மையம் நடத்தியது. லாலாஜி மகராஜ், ஒழுக்க நெறிகளுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, அந்த வினாப்பட்டியல் தயாரிக்கப்பட்டு இருந்தது. விழாவின்போது, பேரின்பமும், நன்றியுணர்வும் நிறைந்த ஒரு சூழலை உணர்ந்தனர்.

உத்திரப்பிரதேசம், மிர்ஜாபூர் மையத்தில், பசந்த் உற்சவம் மிகுந்த ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் கொண்டாடப்பட்டது. காலை சத்சங்கத்தைத் தொடர்ந்து, பல்வேறு பொருள்களில் சொற்பொழிவுகள் இருந்தன. பக்திப்பாடல்கள் பாடப்பட்டன. லாலாஜி மகராஜின் மேற்கோள் வாக்கியங்களும் படிக்கப்பட்டன.

கொல்கத்தா, காங்டாக், ராணிகஞ்ச் மற்றும் சிலிகுரி போன்ற மேற்கு வங்கத்தைச் சேர்ந்த மையங்களும் மிகுந்த ஆவலுடனும், மனமார்ந்த மகிழ்ச்சியுடனும் விழாவைக் கொண்டாடினர். ராணிகஞ்ச் மையத்தில், சத்சங்கத்திற்குப்பின், வினா - விடை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. கொல்கத்தா மையத்தில், விஸ்பர்ஸ், டெய்லி ரிஃப்லெக்ஷன்ஸ் ஆகியவை வாசிக்கப்பட்டு, அவற்றைப் பற்றி ஆழ்ந்த சிந்தனை செய்தனர். மாலை சத்சங்கத்திற்குமுன், லாலாஜி மகராஜின் வாழ்க்கை பற்றிய வீடியோ திரையிடப்பட்டதுடன் விழா முடிவடைந்தது.

## பெண்கள் படிப்புக்குழு, கொல்கத்தா

சகஜ மார்க்கத்தின் பல்வேறு அம்சங்களையும், நடைமுறை வாழ்க்கையில் செயல்படுத்துவதைப் பற்றிக் கலந்துரையாட, கொல்கத்தா ஆசிரமத்தைச் சேர்ந்த இளம் பெண்கள், முனைந்துள்ளனர். ஒவ்வொரு வாரமும் ஒரு பொருள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதனைப் பற்றிய தங்கள் அனுபவங்களைப் பற்றிப்பேச, அங்கத்தினர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். அத்தகைய ஒரு கூட்டத்தில், பத்து நியமங்களில் ஒன்றான, 'எல்லோரையும் உடன் பிறப்பெனக்கருதி, அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்' என்ற நியமம் பற்றி கலந்துரையாடப்பட்டது. நமது நன்னெறிகளுக்கும், வளர்ந்து வரும் மேல்நாட்டு நாகரீகத்தின் தாக்கத்திற்கும் இடையே ஒரு சமநிலை செய்து, வளர்ந்த குழந்தைகளிடம் எவ்வாறு நடந்து கொள்ளுவது போன்ற, நம் குடும்ப வாழ்க்கையில் எதிர் கொள்ளும் விஷயங்களுக்குத் தீர்வு காணப்பட்டது. எவ்வாறு, குழந்தைகள், அவர்களின் சொந்த நன்மைக்காகவே, சில கொள்கைகளுக்குத் கீழ்ப்படிய வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, அவ்வாறே, மாஸ்டரின் குழந்தைகளாகிய நாம், நம் முன்னேற்றத்திற்காக, அவர் கூறுவதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று உணரப்பட்டது. டைரி எழுதுதல், தற்பெருமையை எவ்வாறு கையாள்வது, உலகளாவிய பிரார்த்தனை, நிரந்தர நினைவு ஆகியவை பற்றியும் பல கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டன. ஒவ்வொருவரும், தங்கள் கருத்துக்கள், பிரச்சனைகள், அவற்றிற்கான தீர்வுகள் ஆகியவற்றைப்பற்றிப்பேச அழைக்கப்பட்டனர். நிஜவாழ்வின் சூழ்நிலைகளை ஆராய்வதன் மூலம், சகஜ மார்க்கத்தின் பலவேறு கோணங்களையும், தங்கள் தினசரி வாழ்க்கையில் இணைக்க இப்பெண்கள் முயன்றனர். இவ்விதமான கலந்தாலோசித்தல் மூலம், தன்னம்பிகையும், தெளிவும் அடைந்ததாகவும், சகஜமார்க்கக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த, மேலும் புதிய வழிகளைக் கண்டறிந்ததாகவும், அங்கத்தினர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

## லால்பானியாவில் வனவிருந்து (picnic)



ஜார்க்கண்டில் உள்ள ராஞ்சி மற்றும் லால்பானியா மையங்களைச் சேர்ந்த அப்யாசிகள், சகஜ மார்க்கத்தைப்பற்றி கலந்துரையாடக் கூட்டத்துடன், ஒரு விருந்தும் நடத்த எண்ணம் கொண்டனர். லால்பானியா, திட்டத்தை ஏற்பாடு செய்ய முற்பட்டபோது, ராஞ்சியைச் சேர்ந்த சகோ. ராமாவதார் சாஹூ நிகழ்ச்சியை அத்துடன் இணைத்தார். டிசம்பர் 26 அன்று, சுமார் 20 அப்யாசிகள் கார் மூலம் லால்பானியாவை அடைந்தபோது, அங்குள்ள அப்யாசிகளின் சகோதரத்தன்மையுடன் கூடிய அன்பாலும், TTPS விருந்தினர் விடுதியின் பச்சைப்புல் வெளியின் மீது விழுந்த இதமான சூரிய ஒளியாலும் வரவேற்கப்பட்டனர். கண்ணுக்கினிய, இயற்கையான நீர் அருவியானது. ராஞ்சி அப்யாசிகளுக்கு, முற்றிலும் புத்துணர்வு ஊட்டுவதாக இருந்தது. அதேபோல், சகஜ மார்க்கத்தின் பல்வேறு அம்சங்களைப்பற்றிய கலந்துரையாடலும், மிகவும் உறுதியாக இருந்தது. அதன் பலனாக, லால்பானியாவிலிருந்து 3 பேரும், ராஞ்சியிலிருந்து ஒருவரும் உடனடியாக அறிமுக சிட்டிங்குகளை எடுத்துக்கொண்டனர். அந்த அன்பு, உணவு, விருந்தோம்பும் தன்மை ஆகியவை, மாஸ்டர் எவ்வாறு நம் ஒவ்வொருவர் மீதும் அமைதியாக வேலை புரிகிறார் என்பதை உணர்த்தின. மேலும் இது போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யவும் ஊக்குவித்தன.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## அறிமுகநிலைப் பயிற்சி நிகழ்ச்சி

ஸ்ம்ருதி வழங்கி உள்ள, ஒலி - ஒளி மூலமான விளக்கங்கள், அப்யாசிகளுக்கு, சகஜ மார்க்கத் தியானப்பயிற்சிமுறைபற்றிய, தெளிவை ஏற்படுத்துகின்றன. ஒலி - ஒளி வடிவில் உள்ள, மாஸ்டரின் சொற்பொழிவுகளின் சிறுசிறு தகவல்கள், அப்யாசிகளின் கவனத்தைக் கவருகின்றன. இந்நிகழ்ச்சி, ஸ்ம்ருதியின் தகுதி பெற்ற பயிற்சியாளர்களால் நடத்தப்படுகிறது. ஒரு நிகழ்ச்சியை நடத்தத் தேவையான திட்டமிடுதல், முயற்சி ஆசியவற்றை இது மிகவும் சுலபமாக்குவதால், பல்வேறுமையங்களிலும் எளிதாக, அடிக்கடி நடத்த ஏதுவாகிறது.

கீழ்க்கண்ட மையங்களில், இந்நிகழ்ச்சி நடைபெற்றபோது, அதன் உள்ளடக்கத்தைப் பெரிதும் பாராட்டிய பங்கேற்பாளர்கள், தங்களை உற்சாகப்படுத்தி, பயிற்சியை முறையாகவும், ஒழுங்காகவும் செய்யும்படி ஊக்குவிக்க, அடிக்கடி இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்தனர்.

- றெய்ச்சூரில், பிப்ரவரி 7ம் தேதி, 32 அப்யாசிகள் பங்கேற்ற ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது.
- ஆந்திரப் பிரதேசம், நெல்லூரில், ஜனவரி 10ம் தேதி நடைபெற்றது. பங்கேற்ற சுமார் 28 அப்யாசிகளில், பலரும் இளைஞர்கள் ஆவர். நிறைய கேள்விகளைக் கொண்டிருந்த அவர்கள், நாளின் முடிவில், தங்கள் வினாக்களுக்குக்கிடைத்த தெளிவான விடைகளால் மிகவும் திருப்தி அடைந்தனர்.
- ஆந்திரப்பிரதேசம் சித்தூரில், ஜனவரி 3ந் தேதி நடைபெற்றது, சுமார் 32 புதிய அப்யாசிகள் பங்கேற்றனர்.
- தமிழ்நாட்டில் உள்ள தேனியில், பிப்ரவரி 7ந் தேதி நடந்தது. இந்த மையத்தில் முதன்முதலாக நடக்கும் இந்நிகழ்ச்சியில், இரண்டு வருடத்திற்குள் சேர்ந்த 15 அப்யாசிகள் பதிவுசெய்து கொண்டனர். அப்யாசிகளால் மிகவும் உற்சாகமாக வரவேற்கப்பட்டது.
- கோயம்புத்தூர் அருகில் உள்ள அன்னூர் மையத்தில், பிப்ரவரி 14 அன்று நடந்தது. 20 க்கும் மேற்பட்ட அப்யாசிகள் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சி, கோயம்புத்தூரைச்சேர்ந்த சகோ. பழனி குமரன் அவர்களால் நடத்தப்பட்டது. சில மாதங்களுக்கு முன்பாகவே தொடங்கப்பட்ட இப்புதிய மையமானது, இந்நிகழ்ச்சியால் மிகுந்த ஊக்கம் பெற்றது.



சித்தூர்



அன்னூர்



றெய்ச்சூர்

## கட்டுரை எழுதும் நிகழ்ச்சி - சான்றிதழ் வழங்குதல்

பிப்ரவரி 7ம் தேதி, வைசாக் ஆசிரமத்தில் பரிசு வழங்கும் விழா ஒன்று நடைபெற்றது. ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு இளைஞர் தினத்தை ஒட்டி, கடந்தவருடம் (ஆகஸ்ட்12, 2009) நடத்தப்பட்ட அகில இந்திய கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சுமார் 800 மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பள்ளிமுதல்வர்கள் கலந்து கொண்டனர். சிறந்த முறையில் செயலாற்றிய ஆந்திரா மருத்துவக்கல்லூரிக்குக் கேடயம் வழங்கப்பட்டது. சுமார் 420 நற்சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மனித நன்னெறிகளான, அன்பு, ஒற்றுமை, மற்றும் சகோதரத்துவத்தை இளம் நெஞ்சங்களில் பதிய வைக்க, நம் மிஷன் எடுத்துக் கொண்டுள்ள முயற்சியை அனைவரும் பாராட்டினர்.

ஹைதராபாத் மையத்தில், மண்டலம் 1A (வடக்கு ஆ.பி.)ல் வெற்றி பெற்றவர்களுக்கான விழா, பிப்ரவரி 7ம் தேதி நடைபெற்றது. மாணவர்களும், பெற்றோர்களும் மண்டல ஆசிரமத்தில் வரவேற்கப்பட்டனர். வெற்றி பெற்ற ஒவ்வொருவருக்கும் சான்றிதழுடன், படங்களால் சித்தரிக்கப்பட்டுள்ள 'என் மாஸ்டர்' புத்தகமும் வழங்கப்பட்டது. பரிசுகள் வழங்கப்பட்டபின்பு நடந்த கலந்துரையாடலின் போது, நம் மிஷன் அமைப்பு பற்றியும், மனித சமுதாயத்திற்கு அது வழங்குவது பற்றியும் சுருக்கமாக விளக்கப்பட்டது. கட்டுரைகளின் பொருள்கள் பற்றித் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி பங்கேற்பாளர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இளைஞர்கள், தாங்களே கூர்ந்து கவனித்து அறிந்துகொண்டதைப் பேசியதைக் கேட்க மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. அன்பு ஒன்றுதான், இந்த உலகை இன்னும் சிறந்த இடமாக மாற்றும் என்று அனைவரும் தெரிவித்தனர். சில பெற்றோர்களும், ஆசிரியர்களும், நம் மிஷன் போன்ற அமைப்புகள், மனிதசமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக, அமைதியான முறையில் செயல்படுவதை மிகவும் பாராட்டினர்.

பிப்ரவரி 2ம் தேதி, சின்னவல்லிக்குளம், விருதுநகர் ஆசிரமத்தில், SRCM இணைச் செயலாளர், சகோ. A.P.துரை அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மொத்தம் 43 மாணவர்கள் தங்கள் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர். மாலை, பெற்றோர்களுக்கும், மற்ற பார்வையாளர்களுக்கும், ஒரு வரவேற்புக்கூட்டம் நடத்தப்பட்டது.

சூரத்தில், மண்டல அளவில் வெற்றி பெற்றவர்கள் தங்கள் பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்களுடன் வந்திருந்து, பாராட்டுச் சான்றிதழ்கள் பெற்றனர். வருகை புரிந்த சுமார் 45 விருந்தினர்களை, குஜராத் மண்டல ஒருங்கிணைப்பாளர், சகோ. வினய் சாவ்டா வரவேற்று, கட்டுரைப் போட்டியின் விவரங்களைப் பற்றிச் சுருங்கக்கூறினார். சூரத் மையப்பொறுப்பாளர், டாக்டர். சுரேந்திர அகர்வால், SRCM மின் பல்வேறு செயல்பாடுகளைப்பற்றிக் கூறியதுடன், சகஜமார்க்க முறையின்படி செய்யும் தியானத்தைப்பற்றியும் வலியுறுத்திக்கூறினார்.



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

ஹனூர்



தார்வாட்



காந்திகிராம்



# வி பி எஸ் இ நிகழ்ச்சிகள்

காந்திகிராம், 'Lakshmi College of Education' ல் பயிற்சி பெறுபவர்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும் இரண்டு நாள் வி பி எஸ் இ நிகழ்ச்சி ஒன்றை, காந்திகிராம் கிராமப்புறப் பல்கலைக்கழகமும், காந்திகிராம் அறக்கட்டளையும் ஏற்பாடு செய்திருந்தன. ஜனவரி 8, மற்றும் 9ம் தேதி நடந்த இந்நிகழ்ச்சியில் சுமார் 250பேர் பங்கேற்றனர். முதல் நாள், சகோதரி சீதா, மன ஒழுக்கத்தின் அவசியம் மற்றும் வழிமுறை, நன்னெறிகள், பண்பு உருவாக்கம், மற்றும் சமநிலை வாழ்க்கை பற்றிப் பேசினார். இரண்டாம் நாள், யோகாவும் சகஜமார்க்கமும் பற்றிய மின் ஒளிப்படக்கருத்துரை வழங்கப்பட்டது. தியானம் மற்றும் ஆன்மீகம் பற்றிய சொற்பொழிவுகள் இருந்தன. காந்திகிராம் அறக்கட்டளையின் அனாதை இல்லத்தைச் சேர்ந்த குழந்தைகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல், நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக இருந்தது. அவர்களுக்கு மிஷனின் பிரார்த்தனையும் அதன் பொருளும் கற்றுக் கொடுக்கப்பட்டன. லட்சுமி சேவா சங்கத்தின், சித்த மருத்துவம் தயார் செய்யப்பட்டும் இடத்தையும், தன்னார்வத் தொண்டர்கள் சென்று பார்த்து, அங்கு பணிபுரிபவர்களுடன் உரையாடினர்.

## தார்வாட், கர்நாடகா.

ஜனவரி 9ம் தேதி, தார்வாட், வித்யாவர்தாகா கூடத்தில் வி பி எஸ் இ நிகழ்ச்சி நடைபெற்றது. பாலபாலகா,

JSSபள்ளி, மற்றும் வேறு பல பள்ளிகளைச் சேர்ந்த, 40க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பங்கேற்றனர். காலை நிகழ்ச்சிகளை நடத்திய சகோதரி ஆஷா மற்றும் சகோ. சரோஜா, நன்னெறிகளின் முக்கியத்துவம், பள்ளியில் குழந்தைகளுக்கு அவற்றை எவ்வாறு கற்பிப்பது என்பது பற்றிப் பேசினர். பிற்பகலில், சகோ. அஜித் காமத், மன ஒழுக்கம் மற்றும் தியானம் பற்றிப் பேசினார். மாலை 5 முதல் 7 மணிவரை, பெற்றோர்களுக்கான நிகழ்ச்சியை சகோதரி வரலெட்சுமி நடத்தினார். பாலவிகாசா அகாடமியின் தலைவர் திரு. சங்கர் ஹாலாகட்டி, நிகழ்ச்சியைப் பாராட்டிப் பேசினார்.

## கொல்கத்தா

ஜனவரி 10 அன்று, கொல்கத்தா மையத்தில் வி பி எஸ் இ தொண்டர்களுக்கான ஒரு பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது. வி பி எஸ் இ யின் கருத்தை அறிமுகப்படுத்தி, அதை செயல்படுத்தும் முறையை விளக்குவதே அதன் நோக்கமாகும். 'எதையும் ஒருவருக்குக் கற்றுக் கொடுக்க முடியாது, இதயத்திலிருந்து தானே மலர்ந்து, ஒரு மாணவனிடமிருக்கும் மிகச் சிறப்பான அம்சத்தை வெளிக் கொண்டுவருவதே சிறந்தகல்வி' என்பதையே வி பி எஸ் இ வலியுறுத்துகிறது. ஆன்மீக நன்னெறிகளைப் பற்றிய நடைமுறைக் கல்வியை, சிறு குழந்தைகளுக்குக் கொடுக்கும்போது, அது அவர்களைத் திடமுள்ளவர்களாக ஆக்கி, சவால்களை எதிர்கொள்ளும் சக்தியை அளிக்கிறது. வி பி எஸ் இ எவ்வாறு நடத்தப்படுகிறது என்பது, பல்வேறு பரிசோதனைகள் மூலம் செய்து காட்டப்பட்டது. நிகழ்ச்சி நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், வி பி எஸ் இ குழுவில் சேரவும் அநேகம் பேர் விருப்பம் தெரிவித்தனர்.

## ஹனூர், கர்நாடகா

ஜனவரி 17ம் தேதி, ஹனூர் மையத்தில், ஆசிரியர்களுக்கான வி பி எஸ் இ பயிற்சி முகாம் நடைபெற்றது. சுற்றுப்புற கிராமங்களில் உள்ள 31 பள்ளிகள், மற்றும் கல்வி நிறுவனங்களில் இருந்து, 12 அப்பாசி ஆசிரியர்கள் உட்பட, 50 பேர் பங்கேற்றனர். பண்பு உருவாக்கம், பொறுமையை வளர்த்துக் கொள்ளுதல், பிரார்த்தனையின் முக்கியத்துவம் ஆகியவை பற்றிய உரையாடல்கள் இருந்தன. காலை 3மணி நேரமும், மாலை 2மணி நேரமும் ஆக 2 பகுதிகளாக நடைபெற்ற இந்நிகழ்ச்சி, பங்கேற்றவர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. முகாமின்போது, பங்கேற்றவர்களுக்காக, 'குறிக்கோளை அடைவதில் மனோபலத்தின் முக்கியத்துவம்', 'நேரத்தை நிர்வகித்தல்', 'ஆன்மீக வாழ்க்கைக்கும், பொருள்சார்ந்த வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு', மற்றும் 'மனித ஒருமைப்பாடு' ஆகியவற்றை விவரிக்கும் வகையில், மாணவர்களால் நடத்தப்பெற்ற நாடகங்களின் வீடியோக்காட்சி திரையிடப்பட்டது. இது போன்ற பல நிகழ்ச்சிகள் நடத்தப்படவேண்டும் என்றும், அதனால் நன்னெறிக்கல்வியை தங்கள் பள்ளிகளில் அறிமுகப்படுத்த ஏதுவாகும் என்றும், ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டதுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

# இளைஞர் நிகழ்ச்சி, ராஞ்சி

ஜனவரி 26 அன்று, ராஞ்சி, குஜராத்தி பள்ளியில் நடந்த ஒரு கூட்டத்தில், 14முதல் 23வயதுவரை உள்ள 49பேர் கலந்து கொண்டனர். சகஜ மார்க்கப் பிரார்த்தனையை சகோ. A.K.லால் அறிமுகப்படுத்தினார். பங்கேற்றவர்கள், அமைதியாகப் பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். சகோ. மனோஜ் திவாரி, மனோபாவம் மற்றும் குண உருவாக்கம் பற்றிப் பேசினார். அனைத்து முகமூடிகளையும் களைந்து விட்டு, நம்முள் இருக்கும் உண்மையான 'நான்', தெய்வீக 'நான்' என்பதை வெளிக் கொணருவதே, உண்மையான மனோபாவ உருவாக்கம் ஆகும் என்பதே அவர் உரையின் சாரம் ஆகும். சகஜ மார்க்கத்தின் பத்து நியமங்களைக் கடைப்பிடிப்பது, இந்த இயற்கை மாற்றத்திற்குப் பெரிதும் உதவும். சகோதரி சுநந்தா சௌஹான், பத்து நியமங்கள் பற்றி சுருங்கக்கூறினார். பங்கேற்பாளர்கள், 7பேரைக் கொண்ட 7குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, 4முதல் 10வரையிலான 7 நியமங்களைப் பற்றி விவாதித்தனர். ஒவ்வொரு குழுவின் கருத்துக்களையும், அக்குழுவிலிருந்து ஒருவர் எடுத்துரைத்தார். நிறைய விஷயங்கள் விவாதிக்கப்பட்டு கருத்துக்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியைப் பற்றிய கருத்துக்களைக் கேட்டபோது, இது போன்ற கலந்துரையாடல்கள் அதிக அளவிலும், அதிக நேரமும் நடத்தப்பட வேண்டும் என்று பெரும்பாலோர் தெரிவித்தனர்.



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

ஒளிமையம்

# இந்தூர் ஆசிரமம்









முதல் முதலில், இரண்டு அப்யாசிகளுடன் தொடங்கப்பட்ட இந்த ஆசிரமம், தற்சமயம் சுமார் 650 அப்யாசிகளைக் கொண்டுள்ளது. 1986ல் நிறுவுனர் நாள் கொண்டாட்டம், 1991ல் பசந்த் உற்சவம், மற்றும் 1996ல் மாஸ்டரின் பிறந்தநாள்விழா ஆகிய முக்கியமான நிகழ்ச்சிகள் நடத்த, வாய்ப்பு அளித்ததன் மூலம், இந்தூர் ஆசிரம அப்யாசிகளை, மாஸ்டர் வாழ்த்தி அருளியுள்ளார்.

நகரத்தின் மத்தியிலும், ரயில்நிலையம், பேருந்துநிலையம் ஆகிய இடங்களிலிருந்து சுமார் 3.5கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ள இந்த ஆசிரமத்தை, பொது பேருந்து வண்டிகள் மூலம் எளிதில் அடைந்து விடலாம். 1992 ஜூலை மாதம், 4050ச.அடி பரப்புள்ள நிலம் வாங்கப்பட்டது. 1993, ஆகஸ்ட் 29 அன்று, அவ்விடத்தில், மாஸ்டர் அதிகாரபூர்வமாக அடிக்கல் நாட்டி, சத்சங்கம் நடத்தினார்.

கட்டிடவேலை 15 மாதங்களுக்குள் முடிவடைந்து, 1994 டிசம்பர் 20 முதல் 24 வரை ஆரம்ப விழா மிக உற்சாகமாக ஏற்பாடு செய்யப்பட்டது. மாஸ்டர் வருகை புரிந்து அருளினார். இம்மகிழ்ச்சியான தருணத்தில் மண்டலத்தின் அனைத்து இடங்களில் இருந்தும் அப்யாசிகள் வந்திருந்து, மாஸ்டரின் பிரசன்னத்தில் திளைத்து மகிழ்ந்தனர்.

2400ச.அடியில் கட்டப்பட்டுள்ள தியானக்கூடம், RCCயினாலான உயர்ந்த கூரையையும், 800ச.அடியில் ஒரு இடைத்தளத்தையும் கொண்டுள்ளது. அந்த ஆசிரமமானது, அப்யாசிகளின் தேவைகளை மனதில் கொண்டு, சமையலறை, உணவுக்கூடம் ஆகியவை இரண்டாம் தளத்திலும், கழிவறைகள், சிறிய தோட்டம் ஆகியவை கீழ்தளத்திலுமாகச் சிறந்த முறையில் திட்டமிடப்பட்டுள்ளது. இடைத் தளத்தில் ஒரு சிறிய அலுவலக அறையும், நூலகம் மற்றும் புத்தகக் கடையும் உள்ளன.

மாஸ்டர், 1990 முதல் 2002வரை, அடிக்கடி வருகை புரிந்து, அப்யாசிகள் மீது அன்பைப் பொழிந்தார். மையம் நன்கு வளர்ந்து, அப்யாசிகள் எண்ணிக்கை அதிகரித்தபோது, இடமின்மை உணரப்பட்டது, அதிர்ஷ்டவசமாக, ஆசிரமத்தை ஒட்டியுள்ள சுமார் 4050ச.அடி நிலமும் 2004 ஏப்ரல் 28ம் தேதி வாங்கப்பட்டது. 2007ம் வருடம், பழைய கூடத்தின் தொடர்ச்சியாக ஒரே கூடமாக உபயோகிக்க



வசதியாக புதிய கூடம் ஒன்றும் கட்டப்பட்டது. அதன் ஆரம்ப நாளான 2009 பிப்ரவரி 16-18 அன்று, சுமார் 2000 அப்யாசிகள் கூடி இருந்தனர்.

ஆசிரமத்தின் தெளிவான, அமைதியான சூழலானது, அப்யாசிகள் மேலும் சிறப்பாக செயலாற்ற உதவுகிறது. ஞாயிறு, மற்றும் புதன் கிழமைகளில் நடைபெறும் சத்சங்கத்தைத் தவிர, வெள்ளிக்கிழமை காலையிலும் சத்சங்கம் நடை பெற்று வருகிறது. ஆசிரியர்கள், குழந்தைகளுக்கான வி பி எஸ் இ நிகழ்ச்சிகள், மண்டல அளவிலான அப்யாசி பயிற்சி நிகழ்ச்சிகள், வரவேற்புக் கூட்டங்கள், சாதனா அறிமுக நிகழ்ச்சிகள், படிப்புக்குழுக்கள், கட்டுரைப்போட்டிகள் போன்ற, பல்வேறு செயல்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. இந்தூர் மையத்தில், மாஸ்டரின் வழிகாட்டுதலின்படி, வி பி எஸ் இ செயல்பாடுகள், சிறந்த முறையில் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

கடந்த 10 வருடங்களாக, குழந்தைகளுக்கான கோடைகால முகாம்கள் நடந்து வருகின்றன. பல உபமையங்களுக்குத் தலைமை மையமாக இருப்பதால், அடையாள அட்டைகள் தயாரித்தல், விழாக்களுக்குப் பதிவுசெய்தல், மிஷனின் புத்தக வெளியீடுக்களை வழங்குதல் ஆகிய பல சேவைகளை, உபமைய அப்யாசிகளுக்குப் புரிந்து வருகிறது.

ஆரம்பத்தில், வேலைகள் பலவற்றையும் நிர்வாகம் செய்யத் தெரியாமல் இருந்தபோது, பல அசௌகரியங்களுக்கு நடுவிலும், மாஸ்டர் இம்மையத்திற்கு வந்திருந்து, இன்று அது உள்ள சிறப்பான நிலைக்குக் கொண்டு வந்தார். வருகையை திட்டமிடுதல், சுய சேவகர் குழு அமைத்தல், பணிகளை ஒதுக்கீடு செய்தல், சுற்றிலும் உள்ள மையங்களிலிருந்து அப்யாசிகளை அழைத்தல், சுய சேவகர்களுடன் வேலை புரிதல், அவர்களுடன் உணவு உண்டு, தங்குமிடம், வாகனவசதி போன்ற ஏற்பாடுகளை கவனித்தல் போன்ற பல்வேறு வேலைகளையும் தானே முன்னின்று நடத்தி இருக்கிறார். அப்யாசிகளை மேடைக்கு அழைத்துப் பேசவைத்து, பின்பு தானே உரையாற்றி, சரியானமுறையில் எவ்வாறு பேசுவது என்று கற்றுக் கொடுப்பார். வரவேற்புக்கூட்டங்கள் நடத்தி, நகரத்தின் முக்கியப்புள்ளிகளை சந்தித்துப்பேசி, அவர்களது கேள்விகளுக்கு விடை அளிப்பார். 1994ம் வருடம், பிரசெப்டர்கள் மாநாட்டைக் கூட்டி, தலைமை தாங்கி நடத்தினார்.

இந்த ஒளிமையமானது, அப்யாசிகளுக்கும், உண்மையிலேயே ஆன்மீகத்தை நாடுபவர்களுக்கும், ஒரு கலங்கரை விளக்கமாக இருந்து, அவர்களது வாழ்வில் அவரது தெய்வீக ஒளியைப் பரப்புகிறது.

**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**
© 2009 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.